DEPOSITION OF WITNESS
(Chapter XXIII Code of Criminal Procedure)
IN THE COURT OF THE ADDITIONAL DISTRICT AND SESSIONS COURT/SPECIAL COURT UNDER E.C ACT CASES, THANJAVUR

C.C.No. -66/2024

Prosecution PW -3

| Name | Thiru.A.Kannan | Occupation |
|---|---|---|
| Husband/Father Name | | Village |
| Taluk | | Age |
| Date | 04.03.2026 | |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873

Accused A4 present. Accused A3 Produced on VC, A1 Produced on PT warran through VC on memo by the counsel for A1, A3 witness being examined.

(This evidence is recorded through Video Conference by using Teams Application. The witness is being in the remote site at City Civil Court, Chennai and who is co-ordinated by the Thiru.S.Barani, Computer Operator, City Civil Court, Chennai and this court is satisfied that the witness is not at all tutored by any body. The witness is identified by police. The Co-ordinator is directed to download this depostion and to get signed by the witness and the co ordinater and the original shall be returned to this court through post and the scanned and signed deposition shall be sent to the court's e – mail ID)

<u>முதல் விசாரணை</u>

நான் தற்பொழுது சென்னை கொறுக்குபேட்டை காவல்நிலையத்தில் ஆய்வாளராக பணிபுரிந்து வருகிறேன். கடந்த 26.02.2023ம் தேதி 17.30 மணிக்கு பண்ருட்டி காவல் நிலைய ஆய்வாளராக பணியிலிருந்தபோது, பண்ருட்டி போக்குவரத்து காவல்நிலைய ஆய்வாளர் பரமேஸ்வர பத்மபநாபன் நிலையம் ஆஜராகி கொடுத்த தனிஅறிக்கையினை பெற்று பண்ருட்டி காவல் நிலைய குற்ற எண். 138/2023 பிரிவு 8(c),20(b)(ii)(B), of NDPS Act மற்றும் இதச பிரிவு 328ன் கீழ் முதல் தகவல் அறிக்கை பதிவு செய்தேன். அந்த முதல் தகவல் அறிக்கை அதசாஆ**.5.** பின்னர் வழக்கினை விசாரணைக்கு எடுத்துக்கொண்டு சம்பவ இடத்தை பார்வையிட்டு பார்வை மகசர் மற்றும் மாதிரி வரைபடம் தயார் செய்தேன். பார்வை மகசர் அதசாஆ.6. மாதிரி

வரைபடம் அதசாஆ.7. பின்னர் 1,2 எதிரிகளையும் வழக்கு சொத்தையும் நீதிமன்ற காவலுக்கு அனுப்பி வைத்தேன். பின்னர் சாட்சிகள் பரமேஸ்வர பத்மநாபன், சிவக்குமார், புஷ்பராஜ், பிரபு, சபரிநாதன், நீலகண்டன், கார்த்திகேயன் ஆகியோரை விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்தேன். 1வது எதிரி கொடுத்த ஒப்புதல் வாக்குமூலத்தின் அடிப்படையில் வேலூர் நகர பேருந்து நிலையத்தின் அருகில் உள்ள கீரின்சர்கில் என்ற சாலையில் 4வது எதிரி கீர்த்தி என்பவரை குற்ற காரணம் கூறி கைது செய்தேன். பின்னர் 4வது எதிரி தாமாக முன்வந்து கொடுத்த ஒப்புதல் வாக்குமூலத்தை உதவி ஆயவாளர் தங்கவேல், தலைமைக் காவலர் ஜோதி ஆகியோர் முன்னிலையில் பதிவு செய்தேன். 4வது எதிரியின் ஒப்புதல் வாக்குமூலத்தின் பேரில் TN-64-X-4926 என்ற பதிவெண் உடைய லாரியையும், லாரி டிரிப் சீட் மற்றும் Tax invoice 4 எண்ணிக்கைகள், Volta impex Pvt.Ltd என்ற துண்டு சீட்டு, பணம் ரூ.2000/-தையும் அதே சாட்சிகள் முன்னிலையில் மகசரில் கைப்பற்றினேன். அந்த கைப்பற்றுதல் மகசர் அதசாஆ**.8.** லாரி இடைக்கால பொறுப்பில் அதன் உரிமையாளர் பெற்றுச்சென்றுள்ளார். அதன் புகைப்படம் சா**.**பொ**.1.** லாரி டிரிப் சீட் சா**.**பொ**.2.** மற்றும் Tax invoice 4 எண்ணிக்கைகள் சா**.**பொ**.3.**, Volta impex Pvt.Ltd என்ற துண்டு சீட்டு சா**.**பொ**.4,** பணம் ரூ.2000/- சா**.**பொ**.5.** பின்னர் 4வது எதிரி மற்றும் தடயச்சொத்துடன் நிலையம் வந்து நீதிமன்ற காவலுக்கு அனுப்பி வைத்தேன். சாட்சிகள் தங்கவேல், ஜோதி ஆகியோரை விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்தேன். இவ்வழக்கின் மாதிரி கஞ்சாவை சிறப்பு உதவி ஆய்வாளர் வாசுதேவன் என்பவர் மூலம் விழுப்புரம் வட்டார தடய அறிவியல் ஆய்வகத்திற்கு அனுப்பி வைத்தேன். இவ்வழக்கின் TN-45-BR-4595 என்ற Etios காரின் ஓட்டுநர் அண்ணாதுரை மற்றும் அவரது மகன் மோகன்ராஜ் ஆகியோரை விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்தேன். TN-64-X-4926 என்ற லாரியின் உரிமையாளர் செல்வகணபதி என்பவரை விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்தேன். பின்னர் சாட்சிகள் சிறப்பு உதவி ஆய்வாளர் வாசுதேவன் மற்றும் தடயத்தை பகுப்பாய்வு செய்து அறிக்கை வழங்கிய விழுப்புரம் வட்டார தடய அறிவியல் இளநிலை அறிவியல் அலுவலர் மீனாட்சி அவர்களை விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்தேன். பகுப்பாய்வு அறிக்கை பெற்றேன். அந்த பகுப்பாய்வு அறிக்கை அதசாஆ**.9.** இவ்வழக்கின் போக்குவரத்து ஆய்வாளரால் கைப்பற்றப்பட்ட TN-45-BR-4595 என்ற கார் அதன் உரிமையாளர் இடைக்கால பொறுப்பில் பெற்றுச் சென்றுள்ளார். அதன் புகைப்படம் சா**.**பொ**.6.** பின்னர் வழக்காவணங்களை பரிசீலனை செய்து இவ்வழக்கின் சட்டப்பிரிவு பிரிவு 8(c),20(b)(ii)

(B), of NDPS Act மற்றும் இதச பிரிவு 328 லிருந்து பிரிவு 8(c),20(b)(ii)(B),25 of NDPS Act ன் கீழ் பிரிவு மாற்றம் செய்து பிரிவு மாற்று அறிக்கை சமர்பித்தேன். பிரிவு மாற்று அறிக்கை அதசாஆ**.10.** இவ்வழக்கின் 3 வது எதிரி சக்தி என்பவர் தலைமறைவாகிவிட்டதால் இத்துடன் என் விசாரணையை முடித்து 1 முதல் 4 எதிரிகள் மீது பிரிவு 8(c),20(b)(ii)(B),25 of NDPS Act ன் கீழ் இறுதி அறிக்கை தாக்கல் செய்தேன். இவ்வழக்கில் தாக்கல் செய்யப்பட்டுள்ள சான்றுபொருள் பிரிவு 52(A)NDPS Act ன் கீழ் நடவடிக்கை எடுக்கப்பட்டு அழிக்கப்பட்டுள்ளது. அதன் புகைப்படம் அதசாஆ **11**.

<u>குறுக்கு விசாரணை **1** வது எதிரி தரப்பில்</u>

1 வது எதிரியிடமிருந்து எவ்வித தடயப்பொருட்களும் கைப்பற்றபடவில்லை என்றாலும், 1 வது எதிரிக்கு எதிரிராக ஆவணங்ககளை ஏற்படுத்தி பொய்யாக வழக்கு பதிவு செய்யப்பட்டுள்ளது என்றால் சரியல்ல

<u>குறுக்கு விசாரணை **3** வது எதிரி தரப்பில்</u>

26.02.2023 ம் தேதி கைப்பற்றப்பட்ட தடயப்பொருள் நீதிமன்றத்திற்கு 15.03.2023 ம் தேதி தான் அனுப்பி வைக்கப்பட்டுள்ளது என்றால் சரிதான். இடைப்பட்ட காவத்தில் சான்று பொருள் எங்கு யார் வசம் இருந்தது என்பதனை காட்ட ஆவணங்கள் தாக்கல் செய்யப்படவில்லை என்றால் சரிதான். இவ்வழக்கின் 3 வது எதிரி அ.சா.2 கொடுத்த தனிஅறிக்கையின் அடிப்படையில் தவறுதலாக சேர்க்கப்பட்டுள்ளது என்றால் சரியல்ல.

<u>குறுக்கு விசாரணை **4** வது எதிரி தரப்பில்</u>

4 வது எதிரியின் பெயர் முதல் தகவல் அறிக்கையில் குறிப்பிடவில்லை என்றால் சரிதான். 1 வது எதிரியின் ஒப்புதல் வாக்குமூலத்தின் அடிப்படையில் சேர்க்கப்பட்டது. 1 வது எதிரி முதல்முதலில் கொடுத்த ஒப்புதல் வாக்குமூலத்தில் 4 வது எதிரியின் பெயர் குறிப்பிடவில்லை என்றால் சரிதான். 1 வது எதிரி 4 வது எதிரிக்கு Gpay மூலம் ரூ.1000/- பணம் அனுப்பியதற்கான ஆதாரம் எதையும் நீதிமன்றத்தில் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். 4 வது எதிரியை நான் சொன்ன நாள், நேரத்தில் கைது செய்யவில்லை என்றாலுமம், 4 வது எதிரி எந்த ஒப்புதல் வாக்குமூலமும

கொடுக்கவில்லை என்றாலும், அதன் அடிப்படையில் எந்த தடயப்பொருளும் கைப்பற்றவில்லை என்றாலும சரியல்ல.

நான் சொல்ல என் உத்தரவுபடி தட்டச்சிடப்பட்டு
என் முன்னிலையிலும், மேற்பார்வையிலும் சாட்சிக்குப் படித்து
காண்பிக்கப்பட்டு சாட்சியால் சரியென்று ஒப்புக்
கொள்ளப்பட்டது.

ஒம்/-...ஜி.சுந்தரராஜன்,
கூடுதல் மாவட்ட (ம) அமர்வு நீதிபதி,
இன்றியமையாப் பண்டங்கள் சட்ட சிறப்பு நீதிமன்றம்,
தஞ்சாவூர்